# THE HINDU'S THIRUVEMPAAVAI AND ISLAM'S BAKEERBAITH IN STRENGTHENING THE SOCIETY - A PERFORMANCE COMPARATIVE STUDY

Mrs. Prashanthi Ilango
Lecturer, Department of Fine Arts, Eastern University of Sri Lanka.
Ilango1966@gmail.com.

Despite several ethnic communities living in areas extending from Verugal to Veeramunai, the Tamil and the Muslim communities of Batticaloa live intertwined by geographical and physical landscape and cultural interchanges resulting from them. Religious and social beniefs that the Hindu and Muslim communities have structured for themselves have blossomed into performances of Thiruvempaavai to Hindus and Bakkir baith to Muslims which link their respective communities with their respective religions. The intrinsic cultured performance of a culture is an important internal factor. Performance produces cultural contents. And as stated by Bronislaw Malinowsky (Anthropology Researcher), performance completes the activity that fulfills man's biological, psychological and social needs. (Mozhithal 2018. Page1). Thus, through this research it is found that Thiruvempaavai of Batticaloa Hindus and Bakkir baith of Muslims are religious and social performances that fulfill the biological, psychological and social needs of the respective communities. Despite Thiruvempaavai and bakkir baith blossoming as two different religious and social cultural entities, Thiruvempaavai of the Hindus living in Batticaloa and the Bakkir baith of Muslims have many resembling multiplicity of characteristics such as the performance method, performance objectives, season and time of performance, social interaction, social benefits, music instruments used, songs sung, themes of those songs, history of their origin, etc. When resemblances contained in this performance are revealed through researches, it is certain that mutual understanding and ethnic integration will strengthen in the communities where these performances are rooted.

**Keywords:** Thiruvembavai, Pakkir Faith, ethnic integration, socialization, multiplicity

**ஆய்வு அறிமுகம்**

இனக்குழுமங்கள் ஒவ்வோன்றும் தாம் வேர்கொண்டெழுந்த சமூகத்தின் மதம், அதுசார்ந்த நம்பிக்கைகள், வாழ்வியல் விழுமியங்கள், பண்பாட்டுப் பெறுமானங்கள், இப்பெறுமானங்களின் பொக்கி'ங்களாய் திகழும் உறவு, உடை, உணவுப் பழக்கவழக்கங்கள் என்பவற்றின் அடிப்படையில் தத்தமக்கேயான கலாசாரத்தை கட்டமைத்து அதனடிப்படையில் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு தத்தமக்கென தனித்துவமான பண்பாட்டுக் கலாசாரப் பின்னணியில் மட்டக்களப்பின் இந்து இஸ்லாமிய மக்கள் வாழ்ந்தாலும் பௌதீக தரைத்தோற்ற புவியியலடிப்படையில் மட்டக்களப்பின் இந்து இஸ்லாமிய இனக்குழுக்கள் நீண்டகால தொடர்புகளையும் இதனாலமைந்த உறவுகளையும் கொண்ட ஒற்றுமைகளையும் தம்மகத்தே கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பண்பாட்டுக் கலாசார பௌதீக கட்டமைப்புகளுக்குள் இருந்து விலகாமல் அதே நேரம் கலைத்துவக் கூறுகளையும் விலக்காமல் காலங்காலமாக நடைபெற்று வரும் இரு சமூக நிகழ்த்துகைகளே மட்டக்களப்பு இந்துக்களின் திருவெம்பாவையும் இஸ்லாமியரின் பக்கீர் பைத்தும். இவ்விரண்டினதும் இந்நிகழ்த்துகைசார் பண்புகளில் தம்முள் பெரும்பான்மையான பல ஒற்றுமைச் சாயல்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

மாதங்களில் சிறந்த மாதமான மார்கழியில் இந்துக்கள் சிவனை நினைத்து திருவெம்பாவை விரதம் அனுட்டித்து வருகின்றனர். இவ்விரத காலத்திலே வைகறையில் துயிலெழுந்து நீராடி இறைவனை தியானித்து பின் திருவேம்பாவைப் பாடல்களைப் பாடியபடி ஊர்கள் தோறும் சென்று உறங்குபவர்களை பள்ளியெழுப்பி வழிபாட்டிற்குத் தயார்ப்படுத்துவது இத்திருவெம்பாவை அனு'டான முறையாகும்.

இதனை ஒத்த நிகழ்த்துகையாகவே இஸ்லாமியரின் பண்பாட்டிலுள்ள பக்கீர் பைத்தை நோக்க முடிகின்றது. இஸ்லாமியரின் நோன்பு காலங்களில் ஸஹர் வேளையிலே தஹராவை இசைத்து பைத்துக்களைப் பாடியபடி

ஊர்கள் தோறும் சென்று மக்களைத் துயிலெழுப்பி சுபஹ் தொழுகைக்குத் தயார்ப்படுத்தும் செயற்பாடாக பக்கீர் பைத் நிகழ்த்தப்படுகின்றது.

இவ்விரு நிகழ்த்துகைகளும் மதப் பண்பாடுசார் வேற்றுமைகளைக் கொண்டிருந்தாலும் இவற்றின் நிகழ்த்துகைகளும் தம்முள் ஒன்றுபட்ட பண்புகளைக் கொண்டிருப்பதையும் இவ்வொற்றுமைக் கூறுக;டாக, பண்பாட்டு ஒற்றுமைகள் ஊடோடி நிற்பதையும் விபரிப்பதே இவ்வாய்வாகும்.

**இலக்கிய மீளாய்வு**

திருவெம்பாவையும் பக்கீர் பைத்தையும் ஒப்பிட்டு இதுவரை நூல்கள் எதுவும் எழுதப்படவில்லை. ஆனாலும் திருவெம்பாவை பற்றியும் பக்கீர் பைத் பற்றியும் தனித்தனியாக நூல்கள் பேசுகின்றன. முனைவர்.கதிர் முருகு எழுதிய 'திருவாசகம்- மூலமும் உரையும்'எனும் நூலில் திரவெம்பாவைப் பாடல்களும் அவற்றிற்கான விளக்கமும் தரப்பட்டுள்ளது. திருவெம்பாவை – திருப்பள்ளியெழுச்சி மூலமும் உரையும் எனும் நூலில் சண்முகசுந்தரம் செட்டியார் ',..முதல் எட்டுப் பாசுரங்களிலும் தூங்குபவரை எழுப்பும் குறிப்பும், கதவைத்திறக்குமாறு வேண்டும் குறிப்பும், பதின்மூன்றாம் பாசுரத்தில் நீராடும் சுனை பற்றியும் குறிப்பிடப்படுகின்றது.'' என்றும் '…சிவபெருமான் குருவாக அடியவர்கள் இல்லங்களுக்கு எழுந்தருளி வந்து அருள்வழங்கும் புகழ்பாடப்படுகின்றது' எனவும் கூறுவதிலிருந்து திருவெம்பாவை நிகழ்த்தப்பட்ட முறைமை பற்றி தெரிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கையின் இஸ்லாமிய பண்பாட்டுச் சூழலில் பக்கீர் பைத் குறித்து விரிவான ஆய்வுகள் இடம் பெறாவிட்டாலும் அண்மைக் காலங்களில் இது பற்றிய குறிப்புகள் சில நூல்களில் பதிவாகியுள்ளன. இந்தவகையில் எம்.எஸ்.றம்சீன் தனது 'இஸ்லாமியக்கலைகள்' எனும் நூலில் 'பக்கீர் பைத் அல்லது றபான் அடித்தல் என்பது கொட்டிப் படித்தல் எனவும் அழைக்கப்படும். ஒருவரோ அல்லது பலரோ சேர்ந்து றபானை அடித்துக் கொண்டு நூறு மசாலா பாடல்களைப் பாடுவார்கள்' என்கின்றார். இது பக்கீர் பைத்தில் நூறு மசாலா பாடல்கள் பாடப்பட்டிருப்பதை சுட்டுகின்றது.

பேராசிரியா எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் இலங்கை முஸ்லீம் நுண்கலைகள் எனும் நூலில் பக்கீர் பைத் பற்றி சுருக்மாக கூறுகின்றார் பின்வருமாறு கூறுகின்றார். 'பாவாக்கள் அல்லது பக்கீர்கள் என்று தம்மை வரையறுத்துக் கொண்டோரின் பாடலும் தஹ்ரா கட்டையின் தாளஒலியும் பக்கீர் பைத் எனப்பட்டது.பாவாக்களின் தஹ்ரா இசையையும் பாடல்களையும் மக்கள் விரும்பிக் கேட்டனர். இக்கருத்து பக்கீர் பைத் முஸ்லீம்களால் விரும்பி ரசிக்கப்பட்ட ஒன்றாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது.

எனவே திருவெம்பாவை பற்றியும், பக்கீர் பைத் பற்றியும் ஒப்பிட்டு ரீதியான பதிவுகள் எதுவும் கிடைக்கப் பெறாதவிடத்தில், இவ்விரண்டின் நிகழ்த்துகைகளிடையே காணப்படும் ஒற்றுமைப பண்புகளை இனம் காண்பதே இவ்வாய்வாக அமைகின்றது.

**ஆய்வு முறையியல்.**

விபரண முறையும் ஒப்பீட்டு முறையும் ஆய்வு முறையியல்களாகப் பயன்படு த்தப் படுகின்றது. மட்டக்களப்பு இந்துக்களிடம் காணப்படும் திருவெம்பாவை, இஸ்லாமியரிடம் காணப்படும் பக்கீர் பைத் என்பவற்றின் நிகழ்த்துகைப் பண்புகளை விபரிப்பதும் இவ்விரண்டு நிகழ்த்துகைகளுக்கும் இடையேயுள்ள நிகழ்த்துகைப் பண்புகளை ஒப்பிடுவதனூடாக, இரு சமூகங்களிலும் காணப்படும் சமூக, சமய, பண்பாட்டு ஒற்றுமைகளை இனம்காணலும் இவ்வாய்வில் மேற்கொள்ளப்படுகின்றது. பண்பாட்டின் அடியிலிருந்து தோற்றம் பெறுகின்ற நிகழ்த்துகைகளை விளங்கிக் கொள்வதனூடாக அவை வேர் கொண்டுள்ள சமூகங்களை விளங்கிக் கொள்ளலாம் எனும் பின்னணியில் இவ்வாய்வு இடம் பெறுகின்றது.

**உரையாடல்களும் பெறுபேறுகளும்**

**இந்துக்களின் திருவெம்பாவை**

இந்துக்கள் வருடந்தோறும் மார்கழியில் தம் முழுமுதற்கடவுளாம் சிவனை நினைத்து திருவெம்பாவை நோன்பு நோற்று வருகின்றனர். சூரியனுடைய உத்தராயண கால தொடக்கத்தில் அதாவது தேவர்களுக்குப் பிரம்ம முகூர்த்தமான மார்கழியில் தேவர்களையும் மக்களையும் துயிலெழுப்பும் விதமாக மாணிக்கவாசக சுவாமிகள் திருவெண்ணாமலையில் திருவெம்பாவையை பாடியருளியிருந்தார்.

வழிபாடுகளுக்குச் சிறந்த நேரமான பிரம்மமுகூர்த்த வேளையிலே (காலை நான்கு முதல் ஆறு மணிவரை) துயிலெழுந்து நீராடி மேளம் அல்லது தவிலை தட்டி திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிக்கொண்டு

வீதிதோறும் சென்று துயின்று கொண்டிருக்கும் மக்களை துயில்கலைத்து எழச்செய்து கோயிலில் நடைபெயும் திருவெம்பாவை பூஜைகளில் கலந்து கொண்டு இறைபுகளைப் பாடித் துதிப்பதற்காகத் தயார்ப்படுத்தும் அனு'டான முறையே திருவெம்பாவையானது நிகழ்த்துகைசார் பணபுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

**இஸ்லாமியரின் பக்கீர் பைத்.**

இஸ்லாமியர்கள் நோன்பு நோற்கும் மாதமான ரழழான் மாதத்தில் ஸஹர் வேளையில் சுபஹ் தொழுகைக்காக மக்களைத் துயிலெழுப்பச் செய்வதற்கு 'பாவா'க்கள் அல்லது பக்கீர்கள் என அழைக்கப்படுபவர்கள் தஹ்ரா வாத்தியத்தைத் தட்டி இசைத்தவாறு பைத்துக்களை(பாடல்கள்) பாடி 'ஸஹருக்கு எழும்புங்கள்' என தூங்கும் நோன்பாளர்களை துயிலெழுப்பி அதற்கு சன்மானமாக பித்ராக்களைப் பெற்றுக் கொண்டு செல்லும் செயற்பாடாக இடம் பெறுவதே பக்கீர் பைத்தாகும். இதுவும் திருவெம்பாவைப் போல பல நிகழ்த்துகைசார் பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

**திருவெம்பாவை – பக்கீர் பைத், நிகழ்த்துகைசர் பண்புகளுக்கிடையிலான ஒப்பீடு**

வரலாற்றுக் காலமாக இந்து மக்களிடையே நிலவி வரும் பண்பாடு சார் நிகழ்த்துகையான திருவெம்பாவையும், இஸ்லாமிய மக்களின் பண்பாட்டில் தொன்றுதொட்டு நிகழ்த்தப்பட்டு வரும் பக்கீர் பைத்தும் நிகழ்த்துகைசார் செயற்பாடுகளினூடாகவும் நிகழ்த்தப்படும் நோக்கம், இவற்றின் வரலாற்றத் தொடக்கம், பாடப்படும் பாடல்கள், இவற்றினூடாக வெளிப்பட்டு நிற்கும் கருத்துக்கள், பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளின் தன்மை, இக்கருவிகள் பயன்படுத்தப்படும் நோக்கங்கள், இவ்விரு நிகழ்த்துகைகளும் இடம்பெறும் காலம், நேரம், இடம், இவற்றுக்கிடையிலான சமய சமூகத் தொடர்புகள், போன்ற அம்சங்களினூடாகவும் தம்முள் ஒற்றுமைத் தன்மைகளைக் கொண்டுள்ளமையே இங்கு விபரிக்கப்படுகின்றது.

**வரலாற்றுத் தொடக்கம்**

திருவெம்பாவை, நிகழ்த்துகையின் ஆரம்பகால வரலாற்றை நோக்கும் போது திருவெம்பாவையானது சங்கத்தமிழரிழடயே காணப்பட்ட தைநீராடல் சடங்கினூடாக தோன்றி, கி.பி எட்டாம் நூற்றாண்டில் ஆண்டாள் இயற்றிய திருப்பாவை நோன்பாய் அரும்பி, மாணிக்கவாசகரின் திருவெம்பாவையாக வளர்ந்து வந்ததொன்றாக காணப்படுகின்றது. சங்க காலத்திலே கன்னிப்பெண்கள் தாம்விரும்பிய கணவரை அடைவதற்காகவும், நாடும் வீடும் நலம் பெறவும், செல்வத்தைவேண்டியும், மழை வேண்டியும் பயிர்வளம் செழிக்கவும் இறைவனை வேண்டி மார்கழி மாதத்தில் நோன்பிருந்தனர். அதிகாலை துயிலெழுந்து, இறைவனைப் போற்றிப் பாடியபடி, வீடு வீடாகச் சென்று தம்தோழியரையும் துயிலெழுப்பி எல்லோருமாகச் சென்று ஆற்றங்கரையில் நீராடி இறைவனை வழிபட்டதற்கு

" இன்ன பண்பின் நின் தைந் நீராடல்

மின் இழை நறு நுதல் மகள் மேம்பட....

( பரிபாடல் 11,வரிகள்134-138)

'தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ...'

எனும் கலித் தொகை வரிகளும் சான்று தருகின்றன. இதையொத்த நிகழ்த்துகையே திருவெம்பாவையிலும் இடம் பெறுகின்றது. திருவெம்பாவை விரத நாட்களில் வைகறையில் துயிலெழுந்து நீராடி இறைவனைத் தரிசித்த பின்னர் அடியார்கள் திருவெம்பாவைப் பாடல்களை இசைத்தவாறு ஊர்கள் தோறும் சென்று ஆன்மீக விழிப்பின்றி உறங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாவை ' கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே...'எனப்பாடி துயிலெழுப்பி, ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியைப் போற்றித் துதிக்க வழிப்படுத்தும் நிகழ்வாகவே திருவெம்பாவை நிகழ்வு இடம் பெற்று வருகின்றது.

இதனைப்போல் பக்கீர் பைத்தினது தோற்றம் பற்றிய கருத்துக்களை நோக்கினால் உலகின் முதல் மனிதனான ஆதாம், 'பாவா ஆதம்' என்றே அழைக்கப்படுகின்றார். இவரும் இவரின் வழித்தோன்றியவர்களும் இறைஞானத்துடன் ஒட்டியவர்களாகவும் இறைவனைத் தேடுபவர்களாகவும் உலகப்பற்றுக்களைத் துறந்த இறைஜக்கியமுடையவர்களாகவும் விளங்கினர். இவர்கள் கி.பி. பத்தாம் நூற்றுறாண்டில் மக்களை நேர்வழிப்படுத்தக் கூடிய போதனைகளைச் செய்வதற்காக ஊர்களுக்குள் பிரவேசிக்கின்றனர். மக்களைக் கவரக்கூடியவாறு எவ்வாறு போதனைகளைச் செய்யலாம் எனச் சிந்தித்த இவர்கள், தஹ்ரா கட்டையை கைகளில் எடுத்துக் கொண்டு இசையாலும் பாடலாலும் போதனைகளைச் செய்ய விளைகின்றனர். தஹ்ராக்

கட்டையின் இசையும் கணீர்குரலில் பாவாக்கள் பாடும் பாடல்களும் மிக்க ரசனைக்குரியனவாய் இருக்க, மக்கள் நின்று ரசித்து இவற்றைக் கேட்கவிளைகின்றனர். இவ்வாறு இசைத் தொண்டு வழியாக இறைத் தொண்டு செய்தவர்கள் பாவாக்கள்' என்றும் 'பக்கீர்கள்'என்றும் அழைக்கப்படலாயினர். இவர்களால் இசைக்கப்பட்ட பாடல்கள் 'பைத்துக்கள்' எனப்பட்டன.

இவ்வாறு தோற்றம் பெற்ற பக்கீர் பைத், காலப்போக்கில் இஸ்லாமியர்களின் பல சமய சமூக செயற்பாடுகளில் செல்வாக்குப் பெறுகின்றது. இவ்வாறு செல்வாக்குப் பெற்ற செயற்பாடுகளில் ஒன்றே ரம்ழான் நோன்பு காலத்தில் ஸஹர் வேளையில் மக்களைத் துயிலெழுப்புவதற்காக தஹ்ராவைத் தட்டி 'யாரிபாஈ யாரிபாஈ யாரிபாஈ வாருங்கள், பாரில் நாங்கள் பலன் பெறவே பாது'ஆவே வாருங்கள் ……'என பாடல்களை பாடி துயிலெழச் செய்து இறைவனைத் துதிக்க வழிப்படுத்தும் நிகழ்வாக பக்கீர் பைத் இடம் பெற்று வருகின்றது.

இதிலிருந்து நோக்கும் போது இந்துக்களின் திருவெம்பாவையாகட்டும் இஸ்லாமியர்களின் பக்கீர் பைத்தாகட்டும் இரண்டுமே நோன்பு காலங்களில் தூங்குபவர்களை உரிய நேரத்தில் துயிலெழுப்பி இறை பிரார்த்தனைகளுக்காக தயார்படுத்துவதே இவ்விரு நிகழ்த்துகைகளினதும் வரலாற்றுத் தொடக்கமாகவும் நோக்கமாகவும் அமைந்திருப்பது இவற்றினிடையே ஊடோடி நிற்கும் ஒற்றுமைத் தன்மையைக் காட்டி நிற்கின்றன.

**நிகழ்த்தப்படும் காலம்**

இந்துக்களிடையே மார்கழி மாதம் மிகவும் அற்புதமான மாதமாகும். வைணவர்களின் வைகுண்ட ஏகாதசியும் சைவர்களின் ஆருத்திரா தரிசனமும் திருவெம்பாவை முழக்கமும் இந்த மாதத்தின் மகிமையை அதிகரிக்கச் செய்யும். மார்கழி மாதமானது தட்சணாயனத்தின் கடைசி மாதமாகும். 'தட்சணாயனம்' என்பது ஆடி முதல் மார்கழி வரை உள்ள ஆறு மாதங்களைக் குறிக்கும். இது தேவர்களின் இரவு காலமாகும்.

மற்றய மாதங்களிலே ஆலயங்களுக்குச் சென்று கடவுளைத் தரிசித்து வழிபாடு செய்தால்தான் பலனுண்டு. ஆனால் மார்கழி மாதத்தில் வெறுமனே தரிசனம் செய்தாலே போதும் பலன் கிடைத்துவிடும் என்பார்கள். மார்கழி மாதத்தில் ஆலயங்களுக்குச் செல்பவர்கள் திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களைப் பாடினால் அளவு கடந்த புண்ணியத்தைச் சேர்த்துக் கொள்ள முடியும் எனவும் மோட்சநிலைக்குச் செல்பவர்கள் திருவெம்பாவை பாடல்கள் மூலம் அதனைப் பெறமுடியும் என்றும் கூறுவர். இத்தனை சிறப்புப் பெறும் மார்கழி மாதமே இந்துக்கள் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியாகிய சிவனை நினைத்து திருவெம்பாவை விரதம் அனுட்டித்து வரும் சிறப்புமிக்க காலமாகும்.

இதனையொத்த மகிமைமிக்க காலமாகவே இஸ்லாமியர்களின் பக்கீர் பைத் இடம்பெறும் ரம்ழான் மாதமுமாகும். ரழழான் மாதம் வந்துவிட்டால் சுவர்க்கத்தின் கதவுகள் திறக்கப்பட்டு நரகத்தின் கதவுகள் மூடப்பட்டு ஷெ'த்தான்களுக்கு விலங்கிடப்படும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளதாக அறியக்கிடைக்கின்றது. இவை தவிர அல்குர் ஆன் அருளப்பட்ட மாதமாகவும், பாவங்களுக்குப் பரிகாரம் கிடைக்கும் மாதமாகவும், நன்மைகள் நிறைவான மாதமாகவும் இவ் ரம்ழான் மாதம் விளங்குகின்றது. இவற்றைவிட இம் மாதத்தில் லைலதுல் கத்ர் எனும் திருக்குறான் அருளப்பட்ட அற்புதம் பொருந்திய இரவு வருவதனால் இது ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்த மாதமாகவும் கொள்ளப்படுகின்றது. இதனாலேயே இஸ்லாமியர்கள் நோன்பு நோற்று இறையருள் பெறும் மகிமை பொருந்திய மாதமாக இவ் ரம்ழான் மாதம் காணப்படுகின்றது.

எனவே திருவெம்பாவை, பக்கீர் பைத் ஆகிய இரு நிகழ்த்துகைகளுமே நிகழ்த்தப்படும் காலமானது தத்தம் சமய நோக்கில் பன்னிரு மாதங்களிலும் எம்மாதம் சிறப்பும் மகிமையும் பொருந்திய மாதமாகக் கணிக்கப்பட்டுள்ளதோ அக்குறிப்பிட்ட அம்மாதங்களிலேயே இவ்விரு நிகழ்த்துகைகளும் அளிக்கை செய்யப்படுவதற்குரிய சிறப்பைப் பெற்றிருப்பதில் ஒற்றுமைத்தன்மையைக் காணமுடிகின்றது.

**நிகழ்த்துகை நேரம்**

இந்துக்களின் திருவெம்பாவையானது மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தை கொண்ட நாளை இறுதிநாளாகக் கொண்டு அதன் முன்வருகின்ற ஒன்பது நாட்களீறாக இடம்பெறும் வழிபாடாகும். இதன் நிகழ்த்துகையில் சூரிய உதயத்தின் முன் பூஜை அனு'டானங்கள் நிறைவு செய்யப்படல் வேண்டும் என்பது நியதியாகும். இதன்படி அதிகாலை நான்கு மணி முதல் ஆறு மணிவரையான பிரம்மமுகூர்த்த நேரமே திருவெம்பாவைப் பூஜை வழிபாடுகளுக்கு உகந்த நேரமாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு நாளிலுள்ள இருபத்துநான்கு மணி நேரத்தில் இறைவழிபாடுகளுக்கும் பிரார்த்தனைகளுக்கும் மிகப் பொருத்தமான நேரமாக விளங்குவது இப் பிரம்ம முகூர்த்த நேரமாகும். இதற்கு இறையியல் ரீதியாக பல காரணங்கள் கூறப்படுகின்றன. அதாவது சூரியன் உதிப்பதற்கு முன்புள்ள அதிகாலைப் பொழுதை உ'த் காலம் என்கின்றது வேதங்கள். இந்த நேரத்தில் சிவபார்வதி மகால'மி தேவர்கள் போன்றோர் வானமண்டலத்தில் சஞ்சரிப்பதாக ஐதீகம். இக்காலத்தில் செய்யப்படும் தியான வழிபாடுகள் பல மடங்கு புண்ணிய பலனைத்தருவதாக ஆன்மீகம் கூறுகின்றது.

இத்தகைய மகத்துவம் வாய்ந்த நேரமே திருவெம்பாவை பூஜைகள் இடம் பெறுகின்றன. இச்சிவ பூஜைகளில் கலந்து கொள்ள, மக்களைத் துயிலெழுப்பும் நோக்குடன் அதிகாலை வேளையிலே வாத்தியங்களை தட்டி ஒலியெழுபியபடி வீதிதோறும் சென்று வீடுவீடாக நின்று 'ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ..' என்று பாடித்துயிலெழுப்பும் நிகழ்வு இடம்பெறகின்றது.

இவ்வாறானதொரு சுப வேளையான ஸஹர் வேவைளையிளேயே இஸ்லாமிய மக்களின் பக்கீர் பைத்தும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. ரம்ழான் நோன்பு காலங்களில் சுபஹ் தொழுகைக்காக நோன்பாளர்களை அரட்டித் துயிலெழுப்பும் நோக்குடனேயே பக்கீர்களால் ஸஹர்பைத் பாடல்கள் பாடப்படுகின்றன. ஸஹர் பொழுதின் இறுதியிலேயே சுபஹ் தொழுகை இடம் பெறுகின்றது. ஸஹர் என்பது சூரிய உதயத்தின் முன்னுள்ள இரவின் கடைசி நாழிகையாகும். இந்த இரவின் கடைசிப் பொழுது இஸ்லாமியர்களுக்கு மிகவும் விே''மானதாகும். காரணம் ஒவ்வோரு இரவிலும் மூன்றின் ஒருபகுதி இருக்கும் போது ரப்(அல்லாஹ் ) துன்யாவின் வானத்திற்கு இறங்கி இந்த நேரத்தில் என்னிடம் யார் பிரார்த்திப்பார்களோ அவர்கள் பிரார்த்தனையை நான் ஏற்றுக்கொள்வேன் என்றும் அவர்கள் வேண்டுவதை நான் கொடுப்பேன் என்றும் பாவமன்னிப்பு வேண்டுபவர்களுக்கு அதனை வழங்குவேன் என்றும் கூறுவதாக புஹாரியை ஆதாரம் காட்டப்பட்டுள்ளது.

எனவே இவ்விரு நிகழ்த்துகைகளும் இடம் பெறும் நேரத்தையும் நோக்கும் போது பின்னிரவு கடந்த விடிகாலைப் பொழுது இரண்டு சமயங்களிலுமே 'பிரம்மமுகூர்த்தம்' என்றும், 'ஸஹர்' என்றும் முக்கியம் பெறுவதும், இரு மதங்களுமே இச்சுபநேரத்தில் இறைவன் வானத்தில் இறங்கி மக்களின் பிரார்த்தனைகளுக்கும் வேண்டுதல்களுக்கும் செவிசாய்க்கும் மகிமைபொருந்திய நேரம் எனும் நம்பிக்கையிலும் ஒன்றுபட்டு நிற்பதும், இச் சுபநேரங்களிலேயே இந்துக்களின் திருவெம்பாவையும் இஸ்லாமியர்களின் பக்கீர் பைத்(ஸஹர் பைத் )தும் நிகழ்த்தப்படுவது இந்நிகழ்த்துகைகள் நிகழ்த்தப்படும் நேர ஒற்றுமையின்பால் நோக்கப்படுகின்றது.

**நிகழ்த்துகை முறை**

மார்கழித் திருவாதிரையை முன்னிட்டு நிகழ்த்தப்படும் திருவெம்பாவை நிகழ்வானது, பிரம்ம முகூர்த்தத்தில் சிவனுக்கு நடத்தப்படும் பூஜையில் கலந்துகொள்வதற்காக அடியார்களைத் துயிலெழுப்பும் நோக்கோடு, அதிகாலை வேளையில் ஊரிலுள்ள சிறு குழுவினர் மேளம், தவில் போன்ற தோல்வாத்தியங்களைத் தட்டி ஒலியெழுப்பிக் கொண்டு, வீதிகள் தோறும் சென்று, திருவெண்ணாமலையில் வீற்றிருக்கும் சிவனை நினைத்து மாணிக்கவாசக சுவாமிகளால் பாடியருளப்பட்ட திருவெம்பாவைப் பாடல்களை ஒவ்வோரு வீட்டின் வாசலிலும் நின்று பாடி, துயின்று கொண்டிருப்பவர்களை துயிலெழுப்பி ஆலயத்தில் நடைபெற இருக்கும் சிவபூஜைக்காக அழைத்துவரும் செயற்பாடுகளைக் கொண்டதாகவே திருவெம்பாவை நிகழ்த்துகை இடம் பெறுகின்றது.

இதனையொத்த நிகழ்த்துகையாகவே இஸ்லாமியரின் பக்கீர் பைத்தும் இடம்பெறுவது நோக்கத்தக்கது. ரம்ழான் நோன்பு காலத்தில், பின்னிரவு நேரத்தில் பக்கீர்கள் எழுந்து தஹ்ராக் கட்டையுடன் தயாராகி வீதிகள் தோறும் சென்று நூறு மஸ்லா(மஸ்லா- புதிர் ), ஆயிரம் மசாலா, நபிகள் ஜீவிய சரித்திரம் போன்ற பாடல்களைப் பாடிக்கொண்டு சென்று ஒவ்வோரு வீட்டின் முன்பும் நின்று தஹ்ராவைத் தட்டி ஒலியெழுப்பி நேன்பாளர்கைத் துயிலெழுப்பி சுபஹ் தொழுகைக்காக தயார்ப்படுத்துவதாகவே பக்கிர் பைத் நிகழ்த்துகை இடம் பெறுகின்றது.

எனவே நிகழ்த்துகைப் பண்பை எடுத்து நோக்கினாலும் ஒரு நிகழ்ததுகையின் அடிப்படை அம்சங்களான காலம், இடம், செயல் ஆகிய மூன்றினடிப்படையிலும் பார்க்கும் போது இரண்டுமே பின்னிரவு(முன்காலை ) நேரத்தையும், தத்தம் மதங்கள் சொல்லும் சுபமாத காலங்களிலும், நிகழ்விடம் இரண்டிற்குமே வீதியும், வீட்டு வாசல்களாயும் அமைவது இவ்விரண்டிலும் மேலோங்கி நிற்கும் ஒற்றுமைச் சாயல்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

**பாடப்படும் பாடல்கள்.**

திருவெம்பாவை, பக்கீர் பைத் ஆகிய இரண்டு நிகழ்த்துகைகளிலும் பயன்படுத்தப்படும் பாடல்களை அவதானிக்கும் போது, இரண்டுமே இறையியல் சார்ந்த பாடல்களாகவும் கடவுளைப் போற்றித்துதித்து மனிதருக்கும் சமூகத்திற்கும் நன்மைபயக்க வேண்டுவனவாயும் அமைந்திருப்பதை காணலாம்.

திருவெம்பாவையை எடுத்துக் கொண்டால் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி', 'விண்ணுக்கு ஒரு மருந்து, வேத விழுப்பொருள்', 'மாலறியா நான்முகனும் காணா மலை', 'ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன்', 'ஏழை பங்காளன்'…..இவ்வாறு தொடரும் பாடலடிகள் மூலம் இறைபுகழ் பாடப்படுகின்றது. இதுபோலவே 'எங்கும் நிறைந்த ஏகன் ஒளியே', ' கருணை நபி வாய் திறந்தால் கஸ்தூரி தான் மணக்கும் கருணை நபி நடந்து வந்தால் கார்மேகம் குடைபிடிக்கும்',வானம் பூமி மலை கடலுருவாகக் காரணம் எங்கள் நபி' என்று பக்கீர் பைத்தும் இறைபுகழ் இயம்பி நிற்கின்றன.

இதனைப் போலவே இப்பாடல்களில் இழையோடி நிற்கும் சமூக நன்மை தொடர்பான கருத்துக்களையும் சக மனிதர்களுக்காகப் பிரார்த்திக்கும் மாண்பையும் 'என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்...', 'என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்..' போற்றியெல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்...' எனும் வரிகள்மூலம் திருவெம்பாவையிலும், ' மண்ணில் மனிதர் மகிழ்ந்திட மணங்கள் எங்கும் பெருகிட கண்ணின் மணியே காத்திட கௌது ெ'ய்கே வாருங்கள்', 'தயக்கம் நீங்கி தவ்லத்துடனே மயக்கம் நீங்கி வாழ்ந்திட உருக்கமுடனே கேட்கிறோம் சிறப்பைத் தரவே வாருங்கள்' போன்ற வரிக;டாக பக்கீர் பைத்திலும் பொருத்திப் பார்க்க முடிகின்றது.எனவே பாடல்களினூடாகவும், அவற்றினூடே செறிந்து நிற்கும் கருத்துக்களூடாகவும் கூட இவ்விரண்டு நிகழ்த்துகைகளுக்குமான ஒற்றுமைகளை உணரமுடிகின்றது.

**நிகழ்த்துவோர் பார்வையாளர் தொடர்பு**

ஒரு நிகழ்த்துகையில் பார்வையாளர் பங்காளர் தொடர்பு என்பது முக்கியமானது. இந்தவகையில் வீதி தோறும் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிக் கொண்டு, வாசல்தோறும் வாத்தியங்களை இசைத்து துயின்றிருக்கும் மக்களைத் துயிலெழுப்பி வரும் அடியார்களுக்கு வீட்டிலுள்ளோர் விடிகாலை வேளைக்கு ஏற்றாற்போல் சுடச்சுட கோப்பி தேனீர் பானங்களை தயாரித்துக் கொடுத்து உற்சாகப் படுத்துவர். இவ்வேளையில் அடியார்களால் பாடப்படும் பாடல்களையும் கேட்டு இன்புறுவர்.

இத்தகையதோர் நிகழ்வே இஸ்லாமியர்களின் பக்கீர் பைத்திலும் இடம் பெறுகின்றது. பின்னிரவில் எழுந்து நோன்பாளர்ளைத் தொழுகைக்காகத் தயார்ப்படுத்த வீதிகளெங்கும் பைத்துக்களைப் பாடித் துயிலெழுப்பிச் செல்லும் பக்கீர்கள் தம் வாசல்களுக்கு வரும்போது அவர்கள் பாடும் பைத்துக்களை ரசித்தவர்களாக அவர்களுக்கு குடிபானங்களை கொடுத்து உபசரித்து உற்சாகப் படுத்துவது வழமையாக இருந்துள்ளது.

எனவே இவ்விரு நிகழ்த்துகைகளிலும் பார்வையாளர்களான மக்கள் நிகழ்த்துபவர்களை ஆதரிப்பதும், உபசரிப்பதும் அவர்தம் பாடல்களை நின்று ரசித்துக் கேட்பதுமான தொடர்புகள் இருநிகழ்த்துகைகளிலும் ஒற்றுமைப்பட்டு நிற்பதைக் காணலாம்.

**இசைக் கருவிகள்**

வாத்தியக் கருவிகள் பலவகையினவாய் இருக்கின்ற போதிலும் இங்கு ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்படும் இரு நிகழ்கலைகளிலும் பயன்படுத்தப்படும் வாத்தியக்கருவிகள் தோற்கருவிகளாகவே இருப்பத குறிப்பிடத்தக்கது. தோற்கருவிகள் பெரும்பாலும் காயவைத்த விலங்கின் தோலைப் பதப்படுத்தி பொருத்துவதன் மூலம் உருவாக்கப்படுபவை. தோற்கருவிகளில் தட்டி ஒலியெழுப்பும் போது அவை ''திண்'' என அதிர்ந்து, அதிர்வொலியை நீண்ட தூரத்திற்கு கொண்டு செல்லக் கூடியவை. இதனால் அசதியிலும் ஆழ்ந்த தூக்கத்திலும் இருக்கும் மக்களை விழித்தெழச் செய்ய தோற்கருவிகளே பொருத்தமாய் இருந்தன போலும்.

திருவெம்பாவையை எடுத்துக் கொண்டால் இங்கு பயன்படுத்தப்படும் ,தவிலும் தோற்கருவிகளின் பாற்பட்டதுவே. இவற்றுடன் பாடல்களின் இசைக்கு வலுச்சேர்க்க சல்லரியும் பயன்படுகின்றது. இங்கு தவிலானது பலாமரக் கட்டையைக் குடைந்தெடுத்து அதன்மேல் காயவைத்துப் பதப்படுத்திய ஆட்டுத்தோலை இறுக்கமாக இழுத்து ஒட்டித் தயாரிக்கப்படுகின்றது. தோல் போடப்பட்ட முகப்புப் பகுதியில் விரல்களால் அடித்து ஒலியெழுப்பும் போது, தோலில் அதிர்வு உண்டாகி எழும் 'திண்' எனும் ஒலி நீண்டதூரம்வரை கேட்கக் கூடியது. தவிலின் தாளத்திற்கு ஏற்ப தட்டப்படும் சல்லாரிகளின் ஓசை செவிக்கு இனிமையைமும் ரசனையையும் தரக்கூடியது. ஏனவே பின்னிரவு வேளைகளில் தவில் அடித்து திருவெம்பாவை பாடல்களைப் பாடும் போது அதன் ஒலியும் அதனோடு இணையும் சல்லாரிகளின் ஒலியும் அதிகதூரம் வரை சென்று தூக்கத்திலிருப்பவர்களை விழிக்கச் செய்வதற்குப் பொருத்தமானதாய் அமைந்தது.

இதனையொத்த இசைக்கருவியே பக்கீர்பைத்திலும் பயன்படுத்தப்படுகின்றது. பலாமரத்தைக் குடைந்து பெற்றுக் கொண்ட வளையம் ஒன்றிலே ஒரு பக்கத்தை ஆட்டுத்தோலினால் இறுக்கமாக இழுத்து மூடி, மரவளையத்திலே ஐந்து இடங்களில் நீள்சதுரமாக இடப்பட்ட துளைகளில் சல்லரிகளைப் பொருத்தி உருகாக்கப்பட்ட இசைக்கருவியே தஹ்ரா. இதனைத் தட்டி பாடல்களை இசைக்கும் போது தஹ்ராவின் அதிர்வொலியும் அதனோடிணைந்த சல்லாரியின் எதிரொலியும் பாவாக்களின் குரலொலியும் இரவின் நிசப்தத்தை தகர்த்து தூங்குபவர்களைத் தட்டித் துயிலெழுப்ப மிகப் பொருத்தமான இசைக்கருவியாக காணப்பட்டது.

இவ்வாறு திருவெம்பாவிலும் பக்கீர் பைத்திலும் பயன்படுத்ப்படும் இசைக்கருவிகளை நோக்கும் போது, இரண்டுமே இரவில் தூங்குபவர்களைத் இறைவழிபாட்டிற்காகத் துயிலெழுப்ப வேண்டிய தேவைக்காக பயன்படுத'தப்பட்டதால் இரவின் நிசப்தத்தைக் கிழித்து 'கணீர்'எனும் ஒலியை உருவாக்கக் கூடிய தோற்கருவிகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனையும் விட இவ்விரு இசைக்கருவிகளும் பலாமரக்கட்டைகளையும் உச்ச அதிர்வைத் தரக்கூடிய ஆட்டுத்தோலையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருப்பது, இவற்றின் ஒற்றுமைக் கூறுகளை இன்னும் ஆழமாக்கி நிற்கின்றது. இவற்றோடிணைந்து

ஆய்விற்கான இரு நிகழ்கலைகளிலும் இணை இசைக்கருவியாக சல்லாரியே பயன்னட்டிருப்பதும் இவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமைத் தன்மைகளை இன்னும் வலுப்படுத்தி நிற்கின்றன.

**இந்நிகழ்த்துகைகளின் இன்றைய நிலை**

சமூகம் என்பது அசைவியக்கம் உடையது. இதன் இயங்குநிலையில் பல பண்பாட்டு மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்படுவது இயல்பு. இன்றைய சமூகங்களின் பண்பாட்டு வளர்ச்சியிலே உலகமயமாக்கலின் ஆதிக்கத்தையும், காலனியத்துவ சிந்தனைகளின் தாக்கத்தையும் தவிர்த்துவிட்டு நோக்குவதென்பது முடியாதொன்றாகிப் போயுள்ளது. இந்த வகையில் பண்பாட்டின் வேர்களிலிருந்து மேலெழும் கலைகளிலும் இவற்றின் கலப்பைக் களைந்தெறிதல் இயலாமலுள்ளது. இந்தவகையில்தான் கல்லடி காத்தான்கூடி சமூகங்களையும் பார்க்க வேண்டியுள்ளது.

இன்று இச்சமூகங்களில் இயங்கு நிலையில் காணப்படும் நிகழ்த்துகைக் கலைகளாகவே திருவெம்பாவையும் பக்கீர்பைத்தும் காணப்படுகின்றன. ஆனாலும் அன்று தொடர்ச்சியான விரத நோன்புகளின் அசதியும், உழைப்பின் களைப்பில் உண்டாகும் ஆழ்ந்த உறக்கமும் விடியலை மறந்து உறங்கச் செய்யும் போது, முன்காலையில் நிகழும் திருவெம்பாவை பூஜைகளுக்காகவும், சுபஹ் தொழுகைக்காகவும் விழித்தெழுதல் என்பது சிரமமாகிப் போயிருந்தது. இவ்வாறான வேளைகளில் வாத்தியங்களை ஒலிக்கச் செய்து, வீட்டின் வாசலில் வந்து 'கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே, எண்ணிக் குறையில் துயிலேவோர் எம்பாவாய்'' எனத் துயிலெழுப்புவதும், ' நாங்கள் நடத்தும் மஜ்லிசில் நாடி உம்மை அழைக்கின்றோம்'' என தொழுகைக்காக அழைத்துத் துயிலெழுப்புவதும் இன்றியமையாததோர் தேவையானதாய் உணரப்பட்டது.

ஆனால் இன்று திருவெம்பாவைக் காலங்களிலும் ரம்ழான் நோன்பு நேரங்களிலும் அதிகாலையியலே கோயில்களிலும் மசூதிகளிலும் நான்கு திசைகளிலும் கட்டப்பட்டுள்ள ஸ்பீக்கர்களில் ஒலிக்கும் பாடல்களும்

வாங்கு ஓசைகளும் தவிலுக்கும் ரபானுக்கும் முதல் தலையணைக்கருகில் அலறும் செல்போன்களின் அலாரமும், வானொலி அலைவரிகள் போட்டி போட்டுக் கொண்டு ஒலிபரப்பும் அதிகாலைப் பூஜைகளின் நேரடி ஒலிபரப்புகளும். விசேட சஹர் நிகழ்ச்சிகளும் வீதிதோறும் திருவெம்பாவை பாடல்களை பாடிச்சென்று துயிலெழுப்புதல், பக்கீர் பைத் போன்ற நிகழ்த்துகைகளின் தேவையை இன்று புறந்தள்ளியுள்ளன. இதனால் அருகிவரும் இந்நிகழ்த்துகைகள் இன்றைய இளந்தலைமுறையினருக்கு இன்னதென்று கூட தெரியாத ஒரு நிலை இன்று உருவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

இவற்றைத் தொகுத்து நோக்கும் போது இந்துக்களின் திருவெம்பாவை, இஸ்லாமியர்களின் பக்கீர் பைத் என்பன வரலாற்று ரீதியாக இவை தோற்றம் பெற்ற காரணங்கள், இவை நிகழ்த்தப்படம் காலம், நிகழ்த்துகை நேரம், இவற்றின் நிகழ்த்துகைப் பண்புகள், பயன்படுத்தப்படும் பாடல்கள், பாடல்களில் செறிந்துநிற்கும் சமய, சமூகக் கருத்துக்கள், பாடல்களை மெருகூட்டப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள், இன்று இந்நிகழ்கலைகளின் இன்றைய நிலை என்பனபோன்ற இன்னோரன்ன பண்புகளில் இவ்விரு நிகழ்த்துகைளும் தம்முள் பலத்த ஒற்றுமைகளைக் கொண்டிருப்பதைக் இவ்வாய்வினுர்டாகக் காண முடிகின்றது.

கலைகள் ஒரு சமூகத்தின் பண்பாட்டினடியாகவே உயிர்ப்புப் பெறுகின்றன. பண்பாட்டின் பல தேவைகள் ஒரு கலையின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் நிலைப்பிற்கும் ஆதாரமாயமைவன. இந்த வகையில் திருவெம்பாவை, பக்கீர் பைத் ஆகிய இரு நிகழ்த்துகைகளும் இரு வெவ்வேறு பண்பாடுகளைக் கொண்ட சமூகளினடியிலிருந்து தோற்றம் பெற்றிருந்தாலும் அவை இரண்டிற்குமிடையே காணப்படும் மேற்கூறப்பட்ட பெரும்பாண்மையான நிகழ்த்துகைப் பண்புகளின் ஒற்றுமைகளும் சமூகத் தேவைகளும் இவ்விரு பண்பாடுகளிலும் காணப்படும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஒரு சமூகம் தனக்குள் கொண்டுள்ள நம்பிக்கைகள், ஐதீகங்கள், மரபுகள் என்பனவற்றை ஒத்த செயற்பாடுகள் பிறிதொரு சமூகத்திலும் நிகழ்த்தப்படும் போதும் இவை தொடர்பான புரிந்துணர்வுகள் இரு சமூகங்களாலும் உணரப்படும் போது அது சமூகங்களுக்கிடையிலான உறவையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப ஏதுவாய் அமையும்.

**முடிவுரை**

நிகழ்த்துகைகள் மூலம் அவை நிகழும் பண்பாட்டைப் புரிந்து கொள்ளவும், அவற்றின் சமூகப் பண்பாட்டின் பொருண்மைகளையும் செயற்பாடுகளையும் தெரிந்து கொள்ளவும், இவற்றின் மூலம் அந் நிகழ்த்துகைகள் இடம் பெறும் சமூக மக்களின் பண்பாட்டு வாழ்க்கைக்கும் கலைகளுக்குமிடையிலான உறவுப் பரிமாணங்களை அறிந்து கொள்ளவும் முடியும். இவ்வகையில் ஒரே பிரதேசத்தில் செறிந்து வாழும் வெவ்வேறு பண்பாடுகளைக் கொண்ட சமூகங்களில் நிகழ்த்துகை செய்யப்படும் வேறுபட்ட இரு நிகழ்த்துகைக் கலைகளிடையே காணப்படும் கலைக் கூறுகளின் ஒற்றுமைப் பண்புகளை வலியுறுத்துவதனூடாக அவை நிலை கொண்டுள்ள சமூகங்களிடையேயும் ஒற்றுமையைத் தேடலாம் என்பதே இவ்வாய்வினூடாக வலியுறுத்தப்படுகின்றது.

இந்த வகையிலேயே கல்லடிப் பிரதேச இந்து மக்களிடம் நிலவும் திருவெம்பாவை நிகழ்த்துகைக்கும் காத்தான்கூடிப் பிரதேச இஸ்லாமியரிடம் காணப்படும் பக்கீர்பைத் நிகழ்த்துகைக்கும் இடையிலான ஒற்றுமைகள்

இங்கு ஆய்வு செய்யப்பட்டன. இதன் பெறுபேறுகளாக இவை நிகழ்த்தப்படம் காலம், இவற்றின் நிகழ்த்துகை நேரம், நிகழ்த்துகை முறை, பாடப்படும் பாடல்கள், பாடல்களில் செறிந்துநிற்கும் சமய, சமூகக் கருத்துக்கள், பாடல்களை மெருகூட்டப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள், இன்று இந்நிகழ்கலைகளின் இன்றைய நிலை என்பனபோன்ற இன்னோரன்ன பண்புகளில் இவ்விரு நிகழ்த்துகைளும் தம்முள் பலத்த ஒற்றுமைகளைக் கொண்டிருப்பதைக் இவ்வாய்வினுர்டாகக் காண முடிகின்றது.

மனித உறவுகளை இனக்குழுச் சமூகத்திலிருந்து இன்றவரை புதுப்பித்துக் கொண்டும் செழுமைப்படுத்திக் கொண்டும் இருக்கின்ற அழகியல் வெளிப்பாடுகள் நிகழ்த்துகைகளாகும். சமூகத்தின் ஒவ்வோர் நிகழ்த்தகைகளும் தமக்கென தனித்துவமான பண்புகளையும் அழகியல் கூறுகளையும் கொண்டுள்ளன. இத் தனித்துவத்தில் அச்சமூகத்தினதும், அச்சமூகத்தில் மேலாண்மை கொண்டிருக்கும் சமயத்தினதும் செல்வாக்கு மேலாதிக்கம் பெற்றிருக்கும். இவற்றையும் தாண்டி இரு வெவ்வேறு சமூகச் சமய பண்பாட்டுச் சூழலில் வெளிவரும் நிகழ்த்துகைகளிடையே காணப்படும் மேற்படி ஒற்றுமைகளுூடாக அடிப்படையில் இவ்விரு சமூகங்களிடையேயும் ஒற்றுமைக் கூறுகள் காணப்படுவதையும் இவ்வாறான ஒற்றுமைகள் வெளிக் கொண்டுவரப்படும் போது அவை சமூக ஒற்றுமைகளுக்கும் உறுதுணையாக அமையும் என்பது முடிவாகும்.


உசாத்துணை

நூல்கள்

1. அனஸ்.எம்.எஸ்.எம்.(2007) இலங்கையில் முஸ்லிம் நுண்கலை. ஓர் விமர்சன ஆய்வு. கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.
2. அனஸ்.எம்.எஸ்.எம். இலங்கையில் முஸ்லிம் நாட்டாரியல் கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.
3. அஜ்மல்கான்.பீ.மு,உவைஸ் ம.மு(1997), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி.4. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
4. அப்துல் ஆபித். எம்.ஏ.(2018) தென்கிழக்கு முஸ்லீம்களும் பக்கீர் சமூகமும். செல்பிக்ஸ் அச்சகம் மருதமுனை.
5. தேவகி மனோகரன. (1997) தமிழிசை அரங்கக் கருவிகள். ஜெயராம் அச்சகம்.திருச்சி.
6. மெய்யப்பன். ச.(2016) திருவாசகம்(13ம் பதிப்பு). மணிவாசகர் பதிப்பகம்.சென்னை.
7. சுண்முகசுந்தரம் செட்டியார்.ரா.1959.திருவெம்பாவை – திரப்பள்ளியெழுச்சி மூலமும் உரையும். சைவசித்தாந்த மகாசமாஜ பொன்விழா வெளியீடு.

.ஆய்விதழ்

1. மொழிதல்.(2018) தொகுதி:5, எண்1

நேர்காணல்

1. சாந்தி முகைதீன்- 77 காத்தான்குடி
2. ஆதம்லெப்பை கலிலுார் ரஹ்மான் - 51 நுாலகர். 15, யூ.எஸ்.எச் வீதி காத்தான்குடி
3. நுார்முகம்மது. ஏ. எல். 65. கடை உரிமையாளர் காத்தான்குடி
4. ஜெஸீலா. கே.பி. 50. கிராமவாசி கடந்கரைவீதி. காத்தான்குடி
5. பூர்ணசந்திர குருக்கள்.57, கல்லடி சித்திவிநாயகர் ஆலயம்
6. குகன் சர்மா. குருக்கள்.40, கல்லடி வேலூர் காளிகோயில்